**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் மற்றும் நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | குறித்த நிதியத்தை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்த போதும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக முன்கொண்டு செல்வதற்கு 2019 மார்ச் 01 ஆந் திகதி அரச நிதித் திணைக்களத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. எனினும் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் சட்ட ரீதியான நிதியம் ஒன்றாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாவரவியல் பூங்காக்கள் அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் புதிய சட்டரீதியான நிதிய மொன்றாக ஏற்படுத்துவதற்கும் புதிய திருத்தச் சட்டத்திற்கு உட்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | இந்த நிதியானது சட்டரீதியான நிதியமொன்றாக உருவாக்கப்படவே வேண்டும் அல்லது சுற்றறிக்கையின் பிரகாரம் கலைப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,546,128 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா. 60,241,942 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 38,695,814 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இக் குறைவுக்கு டிக்கட் வருமானம் ரூபா 37,030,400 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தன.

**3.** **செயற்பாட்டு மீளாய்வு**

**செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரோயல் தாவர பூங்காவின் நூதனசாலையின் கலரி நிர்மாணிப்பதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளபடாதிருந்த போதும் அச்செயற்பாட்டிற்காக ஒப்பந்தக்காரருக்கு முற்ணமாக ரூபா 13,604,179 தொகை 2021 திசெம்பர் 30 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 10 ஆந் திகதி நடைபெற்ற பூங்காக்கள் நிதியத்தின் கூட்டத்தின் போது ரோயல் தாவர பூங்காவின் 200 ஆண்டுகள் கொண்டாட்டத்திற்கு உரிய செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கும் அதற்காக நிதிஏற்பாடுகள் சேமிப்பினை பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அவ்வாறு சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் வீதம் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதியத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வருடக் கணக்காக திரண்டுவரும் 25 சதவீத டிக்கட் வருமானம் ரூபா 140,824,507 தொகை நிதியத்திற்கு வெளித் தரப்பினரிடமிருந்து கிடைப்பதற்கு இல்லாத பெறுமதியாக இருப்பதால் அதனை அங்கீகாரத்தைப் பெற்று அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இம்மீதி பெயரளவு கணக்கு பதிவு செய்யப்பட்ட மீதியொன்றாக இருப்பதுடன் தாவரவியல் பொறுப்பு நிதியத்தின் அடுத்த கூட்டத்தில் கலந்துரையாடி இம்மீதியை அகற்றுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெளித் தரப்பினரிடமிருந்து கிடைப்பதற்கு இல்லாத பெறுமதியாக இருப்பதால் அதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடும். |
| (இ) | 2015, 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,217,169 ஆன செலவினமொன்று மேற்கொண்டு அச்சிடப்பட்ட ரூபா 3,547,564 ஆன 05 வகைகளுக்குரிய நிதியத்தின் வெவ்வேறு வெளியீடுகளின் 2988 பிரதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வெளியீடுகளின் விற்பனை குறைவாக இடம்பெற்றிருந்ததுடன் இறுதி இருப்பின் பெறுமதியில் 84 சதவீதம் இந்த வெளியீடுகளின் பெறுமதியுடனானதாக இருந்தது. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக சுற்றுலா பிரயாணிகள் குறைவாக வருகை தந்திருந்தமை காரணமாக விற்பனை குறைவடைந்திருந்தது. | பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி எதிர்வரும் ஆண்டுகளில் முறையாக விற்பனை செய்யப்பட வேண்டும். |

**4 கணக்களிதன்மையும் நள்ளாளுகையும்**

---

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | **கணக்காய்வ அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 08 செயற்பாடுகளுக்குரிய மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 8,850,000 ஆன நிதிஏற்பாட்டினை மிகைத்து ரூபா 8,221,773 அதாவது 93 சதவீதம் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. அத்தோடு செல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் 19 செயற்பாடுகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 67,450,000 தொக யில் ரூபா 29,453,668 ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் பேரில் நிதி ஏற்பாட்டினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தமையால் பெறுகை செயற்பாடுகளை உரிய காலப்பகுதியில் மேற்கொள்ள முடியாமல் போனதன் காரணமாக இவ்வாறு நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | நிதிஏற்பாடுகளை வரையறைக்குள் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பான செயற்பாடுகள் குறிப்பிடப்படாத வேலைகளுக்காக ரூபா 2,600,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பூங்காக்களின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான புனமைப்பு தன்மையிலான செலவினங்களை மேற்கொள்வதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை தெளிவாக இங்கண்டு நிதிஏற்பாடு: செய்யப்பட வேண்டும். |